1979 ஏப்ரல் 26]

ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆயாக்களுக்கான சம்பளம்.

*வினா எண். 830 : திரு. கா. அப்புனு கவுண்டர் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா---

தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள துவக்கப் பள்ளி, உயர் துவக்கப்பள்ளி ஆகியவைகளில் பணிபுரியும் ஆயாக்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களின் விருப்பத்தின் பேரில் கொடுத்து வரும் மாறுபட்ட சம்பள விகிதத்தை மாற்றி நிலையான சம்பளத்தைக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு கா. காளிமுத்து : இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. ஜான் வின்செண்ட் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியக்கூடிய ஆயாக்கள் எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக அனுப்பப்பட்டவர்களில் தேர்வு செய்யப்படுகின்றனரா, அல்லது பி. டி. ஓ. வே நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நேரடியாகவே நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் தொடக்கப்பள்ளிகளில் பணிபுரியும் ஆயாக்கள் பெரும்பாலும் கிராமங்களில் பிரசவம் பார்க்கும் பரம்பரைத் தொழில் பார்த்து வருகிறவர்கள். அவர்களுக்கு, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு வந்தாலும் தனி கோட்டா ஒதுக்கி, அதற்காக அதிகமாக அலைந்து பாடுபடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு இப்போது இருக்கிற அந்த சம்பளத்தை மாற்றி, அரசாங்க சம்பளம் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவரவர்களே, அதைத்தான் அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியஙகளில் பணியாற்றும் ஆயாக்கள் பெரும்பாலும் கைம் பெண்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் ஒன்றியத்திற்கு ஒன்றியம் வித்தியாசப்படுகிறது. எல்லா இடங்களிலும் அவர்களுடைய சம்பளத்தை ஒருமுறைப்படுத்தி அவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் வழங்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, உத்தேசம் உண்டு.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, இந்த ஆயாக்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்தது மிகவும் குறைந்த ஊதியம் என்று சொல்லலாம்; அல்லது கூலி என்று சொல்லலாம், அல்லது அலவன்ஸ் என்று சொல்லலாம்; அதை சம்பளம் என்று சொல்லமுடியாது. அதை 1978-க்குப் பின்னால் குறைத்துக் கொடுக்கிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? அப்படிக் குறைத்துக் கொடுக்கப்பட்டதை மீண்டும் முன்போலவே கொடுப்பதற்கும், அவர்களுக்கு ஒரு நிலையான சம்பளம் கொடுப்பதற்கும், இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்த ஆயாக்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் சில்லரைச் செலவுகள் என்ற தலைப்பிலிருந்து வழங்கப்படுகிறது. ஆகவே தான் ஒன்றியத்திற்கு ஒன்றியம், மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடுகிறது. அவைகளைச் சீர்படுத்துகின்ற வகையில் அரசு ஆய்ந்துகொண்டிருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் நியமிக்கப்படுகின்ற ஆயாக்களுக்கு இப்போது அதற்கான பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்று அரசு புதிதாக உத்தரவு ஏதாவது பிறப்பித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இப்போது பணிபுரிகின்ற ஆயாக்கள் தவிர இனிமேல் புதிதாக ஆயாக்கள் நியமிக்கப் படக் கூடாது என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, சாதாரணமாக கிராமப்புறங்களில் வறுமையில் இருக்கக்கூடியவர்கள்தான் இந்த ஆயாக்கள் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை நியமிக்கும்போது ஏதோ ஒரு காரணத்தால் நியமித்துவிட்டு, பின்னால் நிறுத்துகிற போக்கு இருக்கிறது. அதற்கு இந்த ஊராட்சி ஒன்றியத் தேர்தலுக்குள்ளாக ஒரு பாவ விமோசனம் செய்ய அமைச்சர் முயற்சி எடுப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, முயற்சி மேற்கொள்ளப்படும்.

1979 ஏப்ரல் 26]

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, அந்த பணிபுரியும் ஆயாக்களுக்கு வருடத்திற்கு இரண்டு வெள்ளைப் புடவைகள் (ட்ரெஸ்) கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முதலிலே சம்பளத்தைக் கவனிப்போம்.

குன்னூர் நகர 'மார்க்கட்'

*வினா எண். 831—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரத்தில் ஆற்றின் அருகில் அமைந்துள்ள மார்க்கட் பகுதி மழைக் காலங்களில் வெள்ளத்தினால் சேதம் ஏற்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்,

(ஆ) இந்த பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வுகாண குன்னூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை வரப்பெற்று, அரசின் ஆய்விலுள்ளது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, மேற்படி இடம் குன்னூர் நகரில் ஆற்றின் மையத்தில் ஓரத்தில் இருக்கிறது. ஆற்றின் மையத்தில், ஓரத்தில் இருப்பதால் பெருவெள்ளம் ஏற்படும்போது, மழைநீர் மார்க்கெட்டுக்குள் புகுந்து சேதம் ஏற்படுகிறது. ஆகவே, நகர மக்களுக்கு வசதியாக இருக்கக்கூடிய ஒரு இடத்தில் அந்த மார்க்கெட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்த வெள்ளத்திலிருந்து சேதம் ஏற்படாமலிருக்க முதலில் முயற்சி எடுக்கப்படும். அதை அரசு எடுத்து வருகிறது.

மதுரை நகருக்குக் குடிநீர் வழங்கல்

*வினா எண். 832—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகருக்குப் போதிய குடிநீர் வசதி ஏற்படுத்தும் வகையில் விரைவுத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா?